## மடானி பள்ளிவாசல் நிர்மாணிப்பு

# விவேகத்தின் வெற்றி

## ஆணவத்தால் நடக்கவில்லை -அன்வார்



**கோலாலம்பூர், மார்ச் 28-**
**திட்டமிட்டபடி மடானி பள்ளிவாசல் ஓர் இந்துக் கோவிலுக்குப் பக்கத்தில் கட்டப்படவிருப்பது விவேகத்தின் வெற்றி. ஆணவத்தாலோ சினமூட்டும் நடவடிக்கைகளாலோ அது நடக்கவில்லை என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்றுக் கூறினார்.**

**ஜாலான் மஸ்ஜிட் இந்தியா தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் இந்தப் பள்ளிவாசலின் நிர்மாணிப்புக்கு இடமளிக்கும் வகையில் பக்கத்திலேயே ஒரு புதிய இடத்திற்கு மாறுவதற்கு ஆலய நிர்வாகம் இணக்கம் தெரிவித்தது. இந்த விவகாரத்திற்குப் பேச்சுவார்த்தை மூலம் சுபிட்சமாகத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியது.**

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### மடானி பள்ளிவாசலுக்கு....

மத்திய அரசாங்கம் ஆலய விவகாரத்திற்கு சுமுகமான தீர்வு காணும் என்று அன்வார் உறுதி அளித்ததாக ஆலயத் தலைவர் கே. பார்த்திபன் தெரிவித்தார். நாம் அனைவரும் ஒரே குடும்பமாக சுபிட்சத்துடன் வாழ வேண்டும். மத்திய அரசாங்கம் அனைவரின் நலனையும் கட்டிக்காத்து வருகிறது என்று பிரதமர் குறிப்பிட்டதாக பார்த்திபன் சொன்னார்.

தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய இடமாற்றத்திற்குச் சுமுகமான முறையில் தீர்வு காணப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டதாக பார்த்திபன் தெரிவித்தார். மடானி பள்ளிவாசல் நிர்மாணிப்புக்கு மார்ச் 27ஆம் தேதி அடிக்கல் நாட்டப்படுவதில் அன்வார் மிக உறுதியாக இருந்தார். இதற்கு சில தரப்பினரின் ஆட்சேபத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

நேற்றைய அடிக்கல் நாட்டு விழா மிகுந்த பாதுகாப்புடன் நடைபெற்றது. அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான பெர்னாமா மட்டுமே அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் போலீஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அடிக்கல் நாட்டு விழா காலை 11.30 மணி அளவில் நிறைவுபெற்றது. அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை.

தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் தற்போது வீற்றிருக்கும் இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் ஒரு புதிய இடத்தில் நிர்மாணிக்கப்படும். அந்த ஆலயம் கட்டி முடிக்கப்படும் வரையில் இந்த ஆலயம் இங்கேயே இருப்பதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் அனுமதி அளித்திருக்கிறது.

2014ஆம் ஆண்டு ஜேக்கல் டிரேடிங் நிறுவனம் கோலாலம்பூர் மாநகர் மன்றத்திடம் இருந்து அந்த நிலத்தை வாங்கியதாகச் சொல்லப்படுகிறது. மேலும் ஆலய நிர்வாகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்படாமலேயே நிலம் விற்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

தாங்கள் சார்ந்திருக்கும் இனத்தின் ஹீரோக்களாகக் காட்டிக் கொள்வோரின் முயற்சிகள் நாட்டைச் சேதப்படுத்திவிடும் என்று அன்வார் கூறினார். தங்களின் சொந்த இனத்திற்காக ஒவ்வொருவரும் ஹீரோவாக நினைத்துக்கொண்டு செயல்பட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்றும் அவர் சொன்னார்.